# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 05/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிகுமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மனோகரன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.05.2023.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வின்சன்ட் என்பவருக்கு ரூ.51,23,000/- கடன் கொடுத்ததாகவும் அதன் பேரி காசோலை மோசடி வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் தொகை மட்டும் நினைவில் இல்லை. மேற்படி வழக்கின் என் STC 122/20 என்றால் வழக்கு எண்ணும் நினைவில் இல்லை. கடந்த 17.2.2020 ம் தேதி அன்று மேற்படி வின்செனட்டிற்கு ரூ.51,23,000/-கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன் தொகை மற்றும் தேதி ஞாபகம் இல்லை. 8.2.2020 ம் தேதி மேற்படி வின்செனட் நான் கந்துவட்டி கேட்டு ஆட்களை வைத்து மிரட்டியது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து CSR 43/20 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் வின்செனட் கொடுத்த புகார் சம்பந்தமாக உடுமலை போலிசார் என்னை விசாரித்தார்கள் மேலும் நீதிமன்றத்தில் வழக்கை நடத்திக்கொள்ளுமாறு கூறினார்கள்.

2. மேற்படி வின்செனட் என் மீது புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு தான் நான் அந்த வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன்

என்றால் சரிதான். நான் பிந்துமோல் என்பவருக்கு ரூ.25,00,000/– பணம் கொடுத்ததாகவும் அதை கேட்டு அவருக்கு எதிரிதாக இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிந்துமோல் என்பவரின் கணவர் பிரதாப்க்கு ரூ.1,72,91,000/– கடன் கொடுத்ததாக அவருக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் தொகை தெரியவில்லை.

3. 04.04.2019 ம் தேதி பிந்துமோலின் கணவர் பிரதாப் என்பவரை நான் அவருக்கு சொந்தமான காசோலை மற்றும் ஆவணங்களை வைத்துக்கொண்டு அதிக தொகை கேட்டு மிரட்டுவதாக உடுமலை காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்து CSR No. 181/19 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் புகார் கொடுத்தார் அதன் பேரில் விசாரணை செய்து நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண சொன்னார்கள். மேலும் மேற்படி பிரதாப்பிற்கு எதிராக அவர் கொடுத்ததாக சொல்லும் காசோலையை 10.04.2019 ம் தேதி தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை ஆனால் பிரதாப் புகார் கொடுத்தற்கு பின்பு தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். எனது தந்தை பெயர் மனோகரன் தான்.

4. பிரதாப் என்பவர் எனது தந்தை மனோகரன் இடம் ரூ.25,00,000/– பணம் கடனாக பெற்றுக்கொண்டு திருப்பி செலுத்தவில்லை என்று எனது தந்தை நிலக்கோட்டை DSP அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பிரதாப் எனது தந்தை கொடுத்த புகார் குறித்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்து அந்த வழக்கில் நிலக்கோட்டை DSP எந்த புகாரும் வரவில்லை என்று கூறியதன் பேரில் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செல்வாக்கு மிகுந்த நபர் என்பதால் தான் உடுமலை காவல் நிலையத்தில் என் மீது கொடுத்த புகார்களுக்கு பின்னிட்டு புகார் கொடுத்த நபர்கள் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்வதாக கூறி நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக கூறி புகார்களை முடித்து வைத்தேன் என்றால் சரியல்ல.

5. ரவிச்சந்திரன் என்பவர் மீது எனக்கு ரூ.30,00,000/– பணம் கொடுக்க வேண்டும் என்று கூறி பிராம்சரி நோட்டின் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரி என் மீது உடுமலை காவல் நிலையத்தில் வரம்பிற்கு மீறிய வட்டி கேட்பதாகவும் என்னிடம் உள்ள காசோலை மற்றும் ஆவணங்களை எதிரிக்கு எதிராக பயன்படுத்துவதாக கூறி மிரட்டுவதாக புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு தான் எதிரிக்கு எதிராக இந்த வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக புகாரில் உள்ள விவரம் தெரியாது என்று பொய்

சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஐஸ்வர்யா மருத்துவமனையை வங்கி கடன் பெற்றுதான் வாங்கினேன் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் உடுமலை பகுதியில் மருத்து சேவை செய்யாமல் பதிவு செய்யப்படாத பைனான்ஸ் நிறுவனம் தான் நடந்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவ சேவையே செய்யாமல் வட்டி தொழில் செய்த காரணத்தினால் தான் மருத்துவமனையை மூடிவிட்டு எனது சொந்த ஊருக்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் தவறு. நான் கந்துவட்டி தொழில் செய்து வருவதால் என்னிடம் பணம் வாங்கி கொண்டு கொடுக்காதவர்களிடம் இருந்து பெற்ற நிரப்பப்படாத காசோலை, பிராம்சரி நோட்டு மற்றும் ஆதரவு ஆவணங்களை வைத்துக்கொண்டு அடியாட்களை வைத்து மிரட்டியுள்ளேன் என்றால் தவறு. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் யாருடைய பெயருக்கு காசோலை வழங்கப்பட்டது என்ற விவரம் காணப்படவில்லை என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் புதசாஆ.3 ஆவணத்தில் மேற்படி விவரம் காணப்படவில்லை என்றால் பெயர் காணப்படவில்லை.

7. என்னுடைய அறிவிப்பு மற்றும் புகாரில் பூர்த்தி செய்யப்பட்ட காசோலை தான் கொடுக்கப்பட்டது என்ற விவரம் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் வெற்று காசோலைகளை தவறாக பயன்படுத்தியதால் மேற்படி விவரம் காணப்படவில்லை என்றால் தவறு. எதிரியின் மனைவி பெயர், குழந்தை பெயர் போன்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு காசோலை சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிட்டதுபோல எதிரிக்கு ரூ.15,00,000/— பணம் கொடுக்கவும் இல்லை எதிரி அதை வாங்கவும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரிக்கு நான் கொடுக்காத காரணத்தினால் தான் எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்ததாகவோ, எந்த வட்டியில் வீதம் என்றோ, எந்த தேதியில் காசோலை கொடுத்தேன் போன்ற விவரங்கள் எனது புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் காணப்படவில்லை என்றால் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படும் புதசாஆ.1 ஆவணத்தில் நிரப்பி உள்ள விவரங்கள் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. காசோலையில் உள்ள கையொப்பத்திற்கம் நிரப்பி உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எதிரி ஏற்கனவே காசோலையில் உள்ள விவரங்களை எழுதி கொண்டு வந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்தார். மேற்படி விவரத்தை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி ரூ.15,00,000/—என்னிடம் கடன் வாங்கவும்

இல்லை நான் கொடுக்கவும் இல்லை மேற்படி விவரத்தை கூறிதான் பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் சரிதான். பணம் வாங்கவில்லை என்று கூறிதான் பதில் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் உண்மை என்பதால் தான் நான் மறு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எதிரி அனுப்பிய அறிவிப்பு பொய் என்பதால் தான் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். எதிரி கொடுத்த பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் உண்மை என்பதால் தான் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு எதிரியிடம் வாய்மொழியாக கேட்பு செய்ததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

9. உண்மையிலேயே எதிரி செப்டம்பர் 2015 ல் ரூ.2,00,000/- 5% வட்டிக்கு நான் கடன் தந்திருந்தேன் அதற்கு ஆதரவாக வெற்று காசோலைகள் , வெற்று புரோநோட்டுக்கள், பச்சை கலர் காகிதம் ஆகியவற்றை ஆதரவாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதன்பிட்டு அதிக வட்டி (10%) கேட்டு நான் மிரட்டியதால் தான் என் மீது உடுமலை காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்தார் என்றால் தவறு. எதிரி புகார் கொடுத்தற்கு பின்னிட்டு வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை தொகையான ரூ.15,00,000/- வருமான வரி கணக்கில் வாராக்கடனில் காட்டியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் உண்மையிலேயே ரூ.15,00,000/- பணம் எதிரிக்கு கொடுக்காததால் தான் ஞாபகம் இல்லை என்று குறிப்பிடுகிறேன் என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

10. வின்சென்ட், பிரதாப், பிந்துமோல், ரவிச்சந்திரன் மற்றும் இந்த வழக்கின் எதிரி ஆகியோருக்கு கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல இந்த வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ளபடி தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.